**மாதிரி வினாத்தாள்**

புள்ளியியல்- பகுதி I

10th Standard

**கணிதம்**

Reg.No. :

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.

III.வினா எண் 15-ற்கு கண்டிப்பாக விடையளிக்கவும்

Time : 01:00:00 Hrs | Total Marks : 40

## பகுதி - அ

5 x 1 = 5

1) 2, 3, 5, 7, 11, 13, 17, 19, 23 , 29 என்ற முதல் 10 பகா எண்களின் வீச்சு

(a) 28 (b) 26 (c) 29 (d) 27

2) தொகுப்பிலுள்ள விவரங்களில் மிகச் சிறிய மதிப்பு 14.1 மற்றும் அவ்விவரத்தின் வீச்சு 28.4 எனில், தொகுப்பின் மிகப் பெரிய மதிப்பு

(a) 42.5 (b) 43.5 (c) 42.4 (d) 42.1

3) தொகுப்பிலுள்ள விவரங்களில் மிகப்பெரிய மதிப்பு 72 மற்றும் மிகச்சிறிய மதிப்பு 28 எனில், அத்தொகுப்பின் வீச்சுக் கெழு

(a) 44 (b) 0.72 (c) 0.44 (d) 0.28

4) 11 மதிப்புகளின் $\sum x=132$ எனில், அவற்றின் கூட்டுச் சராசரி

(a) 11 (b) 12 (c) 14 (d) 13

5) n உறுப்புகள் கொண்ட எந்த ஒரு எண்களின் தொகுப்பிற்கும் $\sum(x-\bar{x})=$

(a) $\sum x$ (b) $\bar{x}$ (c) $n\bar{x}$ (d) 0

## பகுதி - ஆ

5 x 2 = 10

6) 43, 24, 38, 56, 22, 39, 45 ஆகிய புள்ளி விவரங்களின் வீச்சு மற்றும் வீச்சுக்கெழு காண்க.

7) ஒரு வகுப்பில் உள்ள 13 மாணவர்களின் எடை (கி.கி) பின்வருமாறு.
42.5, 47.5, 48.6, 50.5, 49, 46.2, 49.8, 45.8, 43.2, 48, 44.7, 46.9, 42.4
இவற்றின் வீச்சு மற்றும் வீச்சுக் கெழுவைக் காண்க.

8) ஒரு புள்ளி விவரத் தொகுப்பின் மீப்பெரு மதிப்பு 7.44 மற்றும் அதன் வீச்சு 2.26 எனில், அத்தொகுப்பின் மீச்சிறு மதிப்பைக் காண்க.

9) முதல் 10 இயல் எண்களின் திட்ட விலக்கம் காண்க.

10) ஒரு புள்ளி விவரத்தில் 30 மதிப்பெண்களின் கூட்டுச் சராசரி மற்றும் திட்ட விலக்கம் முறையே 18 மற்றும் 3 ஆகும். அவற்றின் கூட்டுத் தொகையையும், மேலும் அவற்றின் வர்க்கங்களின் கூட்டுத் தொகையையும் காண்க.

## பகுதி - இ

5 x 5 = 25

11) ஒரு மாதத்தில் 8 மாணவர்கள் படித்த புத்தகங்களின் எண்ணிக்கை பின்வருமாறு.
2, 5, 8, 11, 14, 6, 12, 10. இப்புள்ளி விவரத்தின் திட்ட விலக்கத்தைக் கணக்கிடுக.

12) ஒரு வகுப்பிற்கு நடத்தப்பட்ட பொது அறிவுத்தேர்வில் மொத்த மதிப்பெண்கள் 40-க்கு, 6 மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் 20, 14, 16, 30, 21 மற்றும் 25. இப்புள்ளி விவரத்தின் திட்ட விலக்கம் காண்க.

13) 62, 58, 53, 50, 63, 52, 55 ஆகிய எண்களுக்கு திட்ட விலக்கம் காண்க.

14) 10 மாணவர்கள் கணிதத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் பின்வருமாறு.
80, 70, 40, 50, 90, 60, 100, 60, 30, 80. இம்மதிப்புகளுக்கு திட்ட விலக்கம் காண்க.

15) a) 3, 5, 6, 7 ஆகிய புள்ளி விவரத்திற்குத் திட்ட விலக்கம் காண்க. ஒவ்வொரு மதிப்புடனும் 4 ஐக் கூட்ட கிடைக்கும் புதிய மதிப்புகளுக்கான திட்ட விலக்கத்தையும் காண்க.

**(OR)**

b) 40, 42, 48 எனும் இப்புள்ளி விவரத்திற்கு திட்ட விலக்கம் காண்க. ஒவ்வொரு மதிப்பும் 3 ஆல் பெருக்கப்படும்போது கிடைக்கும் புதிய மதிப்புகளுக்கான திட்ட விலக்கம் காண்க.

*****************************************